[முற்பகல் 9.10]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: அந்தத் திட்டங்கள் எந்தக் காலத்திற்குள் எடுத்து முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: நான்கு திட்டங்களை இப்போது தான் ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறார்கள், ஆய்வு அறிக்கை வந்த பிறகு தான் எந்தத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரியும். அதற்குப் பிறகுதான் கால நேரத்தை நிர்ணயிக்க முடியும்.

திரு. தி. கா. நல்லப்பன்: அமைச்சர் அவர்கள் நான்கு திட்டங்கள் ஆய்வில் உள்ளதாகச் சொன்னார்கள். அந்த நான்கு திட்டங்கள் எவை எவை என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: தொட்டஹள்ள நீர்த் தேக்கத் திட்டம், பெலஹள்ளா நீர்த் தேக்கத் திட்டம், சிக்ஹோளி நீர்த் தேக்கத் திட்டம், மல்லன்குளி நீர்த் தேக்கத் திட்டம். இந்த நான்கு திட்டங்களும் இப்போது ஆய்வு நிலையில் இருக்கின்றன.

தடப்பள்ளி வாய்க்காலில் தூர் எடுக்கும் பணி

*வினா எண் 115—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பவானிசாகரைச் சார்ந்த தடப்பள்ளி வாய்க்கால் நீண்டகாலமாக தூர் எடுக்கப்படாமல் இருப்பதால் கடை கோடியிலுள்ள விவசாயிகளுக்கு பாசன நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) பவானிசாகரைச் சார்ந்த தடப்பள்ளி வாய்க்காலில் தூர் எடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

பாலாபுரம் கிராமத்தில் புதிய ஏரி அமைக்கும் திட்டம்

*வினா எண். 116— திரு. பூ. மு. நாசிம்மன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியைச் சேர்ந்த பாலாபுரம் கிராமத்திற்கு புதிய ஏரி அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது எடுத்துக் கொள்ளப்படும்